**SENGUNTHAR**

# Daily News

**31-07-2025/SEC/DN/229**

**SENGUNTHAR ENGINEERING COLLEGE**

**12 -TN (BN) NCC SALEM**

## CONGRATULATIONS

**INTER GROUP COMPETITION <AITTSC> - 2025, IDIYAPATTI**





**CDT SHALINI S**
**III- BE(R&A)**

CDT SHALINI S OF III-BE (R&A) SENGUNTHAR ENGINEERING COLLEGE, PROUDLY REPRESENTED IN THE INTERGROUP COMPETITION HELD AT NCC TRAINING ACADEMY, IDIYAPATTI, MADURAI FROM 21ST JULY TO 30TH JULY 2025. SHE EMERGED AS THE GOLD MEDALIST IN THE EVENT JUDGING DISTANCE AND FIELD SIGNALS AMONG 6 GROUPS.SHE HAS ALSO BEEN SELECTED FOR THE NEXT CAMP – DIRECTORATE TSC TRG-1.WE CONVEY OUR HEARTFELT CONGRATULATIONS AND BEST WISHES TO HER FOR CONTINUED SUCCESS.

# SEC NEWS IN DAILIES

## ஈரோடு சூரியா ஏஜென்சி நிறுவனத்துடன் திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஈரோடு சூரியா ஏஜென்சி நிறுவனம், திருச்செங்கோடு செங்குந்தர் கல்வி நிறுவனம் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கல்லூரி தாளாளர் பாலதண்டபாணி, சூரியா நிறுவனத்தின் பங்குதாரர் பாலசுப்பிரமணிய முருகராஜ் உள்ளிட்டோர்.

**திருச்செங்கோடு,ஜூலை 30:** திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி, ஈரோடு சோலார் மின் உற்பத்தி நிறுவனம் ஸ்ரீ சூரியா ஏஜென்சியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் ஆ.பாலதண்டபாணி தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் சதீஷ் குமார், செயல் இயக்குநர் அரவிந்த் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தனர். மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை தலைவர் உமா தேவி, நந்தகுமார், பொம்மிராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் தகவல் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தவும், ஆராய்ச்சி வழிகாட்டுதல், ஆசிரியர் மேம்பாட்டு திட்டம், தொழில் பயிற்சி, பயிற்சி பட்டறை மற்றும் வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பயனுள்ளதாக அமையும் என செங்குந்தர் கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சியில் ஸ்ரீ சூரியா நிறுவனத்தின் பங்குதாரர் பாலசுப்பிரமணிய முருகராஜ் , கல்லூரியின் தாளாளர் பாலதண்டபாணி இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

தினமணி Thu, 31 July 2025
https://epaper.dinamani.com/c/77859

## நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



குறள் 589
ஒற்றெற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

விளக்கம்
ஓர் ஒற்றரை மற்றோர் ஒற்றர் அறியமுடியாதபடி மூன்று ஒற்றர்களை இயங்கவைத்து அம்மூவரும் சொல்வது ஒத்திருந்தால் அது உண்மையெனக் கொள்ளலாம்.

## இலக்கணக் குறிப்பறிதல்

**அவன்**

இலக்கணக் குறிப்பு: அடையாலச்சொல் (அடைச்சொல் – சுட்டுரைச்சொல்)

விளக்கம்: செய்பவரைக் குறிக்கும் சுட்டுச்சொல். தொல்காப்பியத்தில் இது சொற்களோடு சேர்ந்து உரை தரும் அடையறைச் சொற்களில் ஒன்றாகும்.

தொ. உரைநிலை: "அடைச்சொல் அவைச் சொற்கள் என்ப..."

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: ரங்க தமிழ்மொழி : அரங்கம்